# செங்கோட்டை நகராட்சி
# நிர்வாக அறிக்கை 2018–2019

**1) நிறுவனம்:**

செங்கோட்டை நகராட்சி 1921–ம் ஆண்டு நிறுவனம் செய்யப்பட்டது ஆகும். இந்நகராட்சி கேரள அரசு திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து தமிழ்நாட்டுடன் 1956-ல் இணைக்கப்பட்டு நகராட்சியாக தொடர்ந்து இருந்து வருகிறது. செங்கோட்டை நகராட்சியின் நிர்வாக எல்லை செங்கோட்டை கிராமம் ஆகும் இந்நகராட்சியின் பரப்பளவு 268.09 ஹெக்டேர் (2.68 சதுர கிலோ மீட்டர்) 2001.ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொதத மக்கள் தொகை 26838 ஆக இருந்தது தற்போது 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 26823 ஆகும். இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு தொடர்ந்து இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகின்றது. (அரசாணை (நிலை) எண் 85, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள் 22.5.1998ன்படி)

| | |
|---|---|
| ஆண்கள் | 13183 |
| பெண்கள் | 13640 |
| மொததம | 26823 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | 3022 |

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி எழுதப்படிக்க தெரிந்தவர்கள் விபரம் பற்றிய ஒரு கண்ணோட்டம்,.

| | |
|---|---|
| எழுதப்படிக்க தெரிந்த ஆண்கள் | 11135 |
| பெண்கள் | 9922 |
| மொத்தம் | 21057 |

தற்போதைய 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் புதியதாக தேசிய மக்கள் தொகை பதிவேடு என்ற கணக்கெடுப்பும் நடத்தப்பட்டது. இதில் குடும்பங்களின் பதிவேடும் மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்ககம் மூலமாக நடத்ததப்பட்டது.

**2. அமைப்பு:**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை 11.6.96–ம் நாளிட்ட அரசாணை எண் 135ல் செங்கோட்டை நகராட்சி வார்டு எண்ணிக்கை 24

என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து தற்போது 2016-ம் ஆண்டில் சாதாரண நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் 24 வார்டுகளாகவே அமைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநரின் 2.7.96–ம் தேதிய 38129/ 96 எல் 3 செயல்முறை ஆணையில் 24 வார்டு பிரிவினை ஒப்புதல் பெறப்பட்டு தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 7/9/2006–ம் தேதிய அரசாணை (நிலை) 87–ல் (1, 2, 5, 6, 8, 10,11, 13, 15, 18, 19, 20,21,23, 24) 15 வார்டுகள் பொதுவிற்கும் (14, 7, 22, 12, 9, 3, 4) 7 வார்டுகள் மகளிருக்காகவும், வார்டு எண் 17, ஆதி திராவிடர் மகளிருக்காகவும் அதில் 16–வது வார்டு ஆதி திராவிடர் வகுப்பினர் (பொது) ஒதுக்கப்பட்டது.

இநநிலையில் 2011ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படியான வார்டு ஒதுக்கீடுகள் அமைவதற்காக அரசாணை(நிலை) எண் 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் ) துறை நாள் 16.9.2016–ன்படி வார்டு எண் 16 (எஸ்.ஸி) (பொது) எனவும் வார்டு எண் 17 (எஸ்.ஸி) பெண் எனவும் வார்டுகள் 14,7,22,12,9,3,4,,2,23,21 ஆகியவை மகளிர் (பொது) எனவும் இதரவை 1,5,6,8,9,10,11,13,15,18,19,20,22,24 ஆகியவை பொதுப்பிரிவினர்களுக்கும் என ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

மன்றத்தின் பதவிக்காலம் 24.10.2016–டன் முடிவடைந்ததனை முன்னிட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் படி நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடைபெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடையினை முன்னிட்டு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு அரசாணை 146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் ) துறை நாள் 24.10.2016–ன்படி தனிஅலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள்,எனவே இந்நகராட்சிக்கு தனிஅலுவலராக கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றிவந்துள்ளார்கள்.

1) திரு ச.செல்வபாலாஜி, பி,இ., ஆணையர் மற்றும் தனி அலுவலர் 01.04.2018 முதல் 03.04.2018 வரை
2) திரு.ந.ராஜமாணிக்கம் எம்.ஏ, ஆணையர் மற்றும் தனி அலுவலர் 05.04.2018 முதல் 28.02.2019 வரை

3) திரு.கோ.வெங்கடசன் பி.எஸ்.ஸி துப்புரவு அலுவலர் (ம) ஆணையர் (பொ) மற்றும் தனி அலுவலர் 28.02.2019 முதல் 31.03.2019 வரை

3)தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம்

24.10.2016 முதல் பதவி காலம் முடிவடைந்த நிலையில் செயல்படவில்லை

<u>4)கமிட்டிகள்:</u>

24.10.2016 முதல் பதவி காலம் முடிவடைந்த நிலையில் செயல்படவில்லை

**<u>அறிக்கையாண்டில் பணியாற்றிய ஆணையாளர்கள்..</u>**

1) திரு ச.செல்வபாலாஜி, பி,இ., ஆணையர் மற்றும் தனி அலுவலர் 01.04.2018 முதல் 03.04.2018 வரை
2) திரு.ந.ராஜமாணிக்கம் எம்.ஏ, ஆணையர் மற்றும் தனி அலுவலர் 05.04.2018 முதல் 28.02.2019 வரை
3) திரு.கோ.வெங்கடசன் பி.எஸ்.ஸி துப்புரவு அலுவலர் (ம) ஆணையர் (பொ) மற்றும் தனி அலுவலர் 28.02.2019 முதல் 31.03.2019 வரை

**அறிக்கையாண்டில் பணியாற்றிய <u>மேலாளர் ( வகுப்பு 4)</u>**

1) திரு. மு.முத்துசெல்வம், பி,ஏ., 01.04.2018 முதல் 16.05.2018 வரை
2) திரு.ஆ.வைரவநாதன் மேலாளர்(கூ.பொ) கடையநல்லூர் நகராட்சி 01.06.2018 முதல் அறிக்கை ஆண்டு முழுவதும்.

.

**நகராட்சி <u>பொறியாளர்</u>**

1) **திரு பி.கே. ரமேஉஷ் எம்.இ.,** எம்.பி.ஏ., ., அறிக்கையாண்டு முழுமையும் பணியாற்றியும் தற்போதும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்கள்.

**<u>நகர்மன்ற கூட்டங்கள்: (அ) (மன்றம்)</u>**

அறிக்கை ஆண்டில் நடைபெற்ற மன்றக் கூட்டம், நியமனக் குழுக்கூட்டம், ஒப்பந்தக் குழுக் கூட்டம், வரி மேல்முறையீட்டுக் குழுக் கூட்டம் ஆகியவைகள் கீழே பட்டியலில் கண்டுள்ளவாறு நடைபெற்றன.

**நகர்மன்ற கூட்டங்கள் (ஆ) தனி அலுவலர்**

**தனி அலுவலர் அவர்களால் நடைபெற்ற மன்ற கூட்டத்தின் விபரங்கள்**

| வ.எண். | குழுக்களின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | **மன்றக் கூட்டம்**<br>அ. சாதாரணக் கூட்டம்<br>ஆ.அவசரக் கூட்டம்<br>இ.சிறப்புக் கூட்டம் | 145<br>0<br>0 | **145**<br>**0**<br>**0** |
| 2 | நியமனக்குழு கூட்டம் | இல்லை | இல்லை |
| 3 | ஒப்பந்தக்குழு கூட்டம் | இல்லை | இல்லை |
| 4 | வரி மேல் முறையீட்டு குழு கூட்டம் | இல்லை | இல்லை |

**5. பொதுப் பணியிடங்கள்**

1. மேலாளர் (வகுப்பு 4) — 1(1 காலியிடம்)
2. கணக்கர் (வகுப்பு 5) — 1
3. இளநிலை உதவியாளர் — 4 (1 காலியிடம்)
4. தட்டச்சர் — 1 (காலியிடம்)
5. பதிவறை எழுத்தர் — 1 (காலியிடம்)
6. அலுவலக உதவியாளர் — 1

அறிக்கை ஆண்டில் நிர்வாகத்தின் கீழ் அனைத்து நிலை ஊழியர்களுக்கும் ஊதியமாக ரூ. 25306635/— செலவு செய்யப்பட்டது. (கணக்கு தலைப்பு 2101001 முதல் 2101008 வரை) அரசாணை (நிலை) 19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.5.2007ல் பணியிடங்களை பூர்த்தி செய்வதில் சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது நகராட்சியின் மொத்த வருவாயில் ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினமாக 49 விழுக்காடுக்கு அதிகமாக செலவினம் ஏற்பட்டால் அரசின் அனுமதி பெறாமல் எந்த ஒரு பணியிடமும் பூர்த்தி செய்யக் கூடாது என அறிவுறுத்தப்பட்டதன்படி காலிபணியிடங்களை நேரடி நியமனங்கள் மூலமாக நிரப்பிட வழிவகை இல்லை.

**6. வருவாய் பிரிவு பணியிடங்கள்**

1.வருவாய் ஆய்வாளர் — 1

2.வருவாய் உதவியாளர்கள் — 5 ( 1 காலியிடம்)

இது வகைக்கு அறிக்கை ஆண்டில் செலவு செய்தது பத்தி 5—ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் அடங்கும்.

**7. எழுது பொருட்களும் பதிவேடுகளும்:**

இந்தத் தலைப்பின் கீழ் கூட்டுறவு அச்சகத்திலிருந்து படிவங்கள் பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வாங்கிய வகைக்கு ரூ.1058996/– செலவு செய்யப்பட்டுள்ளது. (2202101)

**8. பொறியியல் பிரிவு :**

திரு விஜயராஜ், பொதுப்பணி மேற்பார்வையாளர் அறிக்கையாண்டு முழுவதும் பணியாற்றிவந்தார்.

பொறியியல் பிரிவில் அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட பதவியிடங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| பொறியாளர் | 1 | |
| பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | |
| மின் பணியாளர்(நிலை 2) | 1 | (காலியிடம்) |
| பொருத்துனர்(நிலை 2) | 1 | (காலியிடம்) |
| நீர்த்தேக்க காவலர் | 3 | (1 காலியாக உள்ளது) |
| பவுண்டன் கிளினர் | 2 | |
| பூங்கா காவலர் | 2 | (காலியாக உள்ளது) |
| கிளினர் | 2 | (2 காலியாக உள்ளது) |

**9. சாலைகள்:**

அறிக்கை ஆண்டின் முடிவில் நகராட்சியால் பராமரிக்கப்பட்ட சாலைகள் விபரம்:

| | |
|---|---|
| 1. சிமெண்ட் சாலைகள் | 9.738 கி .மீ |
| 2. தார்தளம் சாலைகள் | 16.617 கி.மீ |
| | 26.355 கி.மீ |

அறிக்கை ஆண்டில் பல்வகை திட்டங்களில் வழங்கிய மான்யத்தில் தார்ச்சாலை, மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்படவில்லை.

**10. பாலங்கள்**

2018–19ம் ஆண்டில் ---- இலட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம் கட்டப்பட்டப்பட்டுள்ளது.

**11. சத்திரங்கள்:**

இல்லை.

**12. தெரு விளக்குகள்:**

மின் கம்பியாளர் காலியிடம்

மின் கம்பி உதவியாளர் 1

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி 900 எண்ணம் தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வந்தது.

1 குழல் விளக்குகள் 729 எண்ணம்

2 சோடியம் 171 எண்ணம்

3. உயர் மின் கோபுர விளக்கு 1 எண்ணம்

------------

901 எண்ணம்

------------

மின் விளக்குகள் கணக்கில் அறிக்கை ஆண்டில் ரூ.1575239/– செலவு செய்யப்பட்டுள்ளது 2010-2011 முதல தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் அனைத்தும் தனியார் மயம் ஆக்கப்பட்டுள்ளது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண் 01 நாள் 29.1.2010ன்படி நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருநெல்வேலி, அவர்களின் தொழில் நுட்ப அனுமதிந.க.எண்–6480/09/ஆ3 நாள் 1.02.2009ன்படி 4.2.2010 முதல் தனியார் மயம் மூலம் தெருவிளக்குகள் அனைத்தும் பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. அது வகை செலவு ரூ.375832– ஆகும். இவ்வாறு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் மயமாக்க மேற்கொள்ளபபட்ட படியால் அதில் பணிபுரியும் மின்கம்பியாளர்மற்றும் மின் கம்பி உதவியாளர் ஆகியோர்களுக்கு மாற்றுப்பணி வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்..

m¿ அறிக்கையாண்டில் மின்சிக்கன நடவடிக்கையினை கையாளும் வகையில் நகராட்சி அலுவலகம் முழுமையும் மின்பயன்பாடு பெறுவதற்கு சூரிய மின்தகடு பொருத்தப்பட்டு தன்னிறைவு பெற்றுள்ளது இதுவகையில் ஆண்டு ஒன்றுக்கு மின்கட்டணம் ரூ. 1.74 மின் கட்டணம் செலுத்துவதில் சிக்கனம் ஏற்பட்டுள்ளது.

**13. பணிகள் 2018–2019**

1) திருமிகு கே.ஏ.எம்.முகம்மது அபுபக்கர் அவர்கள் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் பரிந்துரை செய்த பணிகள் விபரம்

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 காலாங்கரை மின்வாரிய அலுவலகம் அருகில் | 4.00 |

| | | |
|---|---|---|
| | பயணிகள் நிழற்குடை அமைத்தல் | |
| 2 | வார்டு 16 கே.சி.ரோட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டுதல் | 7.50 |
| | மொத்தம் | 11.50 |

2) **இதர திட்ட பணிகள்**

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | காலாங்கரை கூடுகாடு அருகில் , வாரச்சந்தை வளாகம் மற்றும் வல்லம் ரோடு கலவை உரக்கிடங்கு வளாகத்தில் நுண்ணுயிரி உரக்கிடங்கு அமைத்தல் | 129.00 |
| 2 | வலலம் ரோடு உரக்கிடங்கு வளாகத்தில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 260.00 |
| 3 | நகராட்சி குடியிருப்புகளில் குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குல் | 175.00 |
| | மொத்தம் | **564.00** |

மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றது.

## 14. கேளிக்கை வரி:

அறிக்கை ஆண்டில் கேளிக்கை வரியாக தொகை ஏதும் பெறப்படவில்லை.அரசாணை(நிலை) எண் 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் ) துறை நாள 29.06.2017-ன்படி கேளிக்கை வரியினை நகர்ப்புற உள்ளாட்சிகள் வசூலிப்பதற்கான அரசிதழ் அறிவிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் இதற்கான வரி நிர்ணயம் மேற்கொள்ளப்படவில்லை.

## 15.முத்திரைக் கட்டணம்:

அறிக்கை ஆண்டில் முத்திரைக் கட்டணமாக ரூ. 933739 /– பெறப்பட்டது. (ஐந்தொகை குறிப்பு கணக்கு தலைப்பு எண் 1201001

## 16 ஆரம்பக் கல்வி:

இந்நகராட்சி மூலம் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. இந்நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட விபரப்படி அரசு ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| அரசு ஆரம்பப்பள்ளிகள் | 2 |
| தனியார் ஆரம்ப பள்ளிகள் | 5 |
| | 7 |

----

அரசு நடுநிலைப்பள்ளிகள் 2

**17. உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்:**

இந்நகராட்சி மூலம் உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

இந்நகராட்சி பகுதியில் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியும் இரண்டு அரசு மேல் நிலைப்பள்ளிகளும் உள்ளன. இவைகளில் ஒன்று ஆண்களுக்கும் மற்றொன்று பெண்களுக்கும் ஆகும்.

**18. சிறப்புப் பள்ளிகள்:**

இந்நகராட்சியில் சிறப்புப் பள்ளிகள் எதுவும் கிடையாது.

**19. சத்துணவுத் திட்டம்:**

இந்நகராட்சியில் தமிழ்நாடு அரசு சத்துணவு மையங்கள் 15.9.82 முதல் செயல்பட்டு வந்தது. 01.04.2003 முதல் சத்துணவு மையங்களில் (2+4) நிர்வாகப்பொறுப்பு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்திற்கு மாற்றப்பட்டது. இந்நகராட்சியில்(5++9) சத்துணவு மையங்கள் எதுவும் இல்லை

**20. பொதுச் சுகாதாரம்:**

அறிக்கை ஆண்டில் கீழ்க்குறிப்பிட்ட விபரப்படி சுகாதார அலுவலரும் சுகாதார ஆய்வாளரும் பணிபுரிந்து வந்தனர்.

1) சுகாதார அலுவலர்: திருகோ.வெங்கடேசன் அவர்கள் 31.08.2018முதல் அறிக்கை ஆண்டு முழுவதும் பணியாற்றி வருகின்றார்கள்.

2)சுகாதார ஆய்வாளர்: மற்றும் பிறப்பு இறப்பு பதிவாளர்

திரு.க.மகேஸ்வரன் 31.08.2018- ல் பணியேற்று அறிக்கை ஆண்டு மற்றும் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

**21. பிறப்பு மற்றும் இறப்பு:**

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப் பெற்ற மொத்த பிறப்புகளின் எண்ணிக்கை 384

பிறப்பு விகிதம் 19.10 சதவீதம்

**22. இறப்பு விகிதம்:**

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப் பெற்ற இறப்புகள் எண்ணிக்கை 201

இறப்பு விகிதம் 7.23 சதவீதம் ஆகும்.

| | |
|---|---|
| 1. காலரா | இல்லை |
| 2. பெரியம்மை | இல்லை |
| 3. பிளேக் | இல்லை |
| 4. காய்ச்சல் | இல்லை |
| 5. வயிற்றுப் போக்கு | இல்லை |
| 6. ஆஸ்துமா போன்ற வியாதிகள் | இல்லை |
| 7. இன்புளுவன்சா | இல்லை |
| 8. நாய்க்கடி | இல்லை |
| 9. இதரவியாதிகள் | 176 |
| 10. டெங்கு காய்ச்சல் | 2. |

அறிக்கை ஆண்டில் சுயஉதவிக்குழு பணியாளர்கள் மற்றும் டி.பி.சி பணியாளர்களை ஈடுபடுத்தி முழுவீச்சில் பணியாற்றி டெங்கு காய்ச்சல் மற்றும் இதர வைரல் காய்ச்சல் வராமல் பொது சுகாதாரம் நன்முறையில் பேணப்பட்டது. மேலும் அறிக்கையாண்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு என பறப்புரையாளர்கள், மேற்பார்வையாளர் என தொகுப்பூதியத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் ஒவ்வொரு நகராட்சிக்கும் நியமனம் செய்யப்பட்டனர், அதன்படி இந்நகராட்சியில் பறப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் பொது சுகாதார பிரிவில் பணியாற்றிவருகின்றார்கள்.

## 23. நோய் தடுப்பு நடவடிக்கை

இந்நகராட்சி தடுப்பூசித் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு தடுப்பூசிகள் போடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | முத்தடுப்பூசி | 322 |
| 2 | போலியோ | 322 |
| 3 | இரட்டை தடுப்பூசி | இல்லை |
| 4 | இசிவுநோய் தடுப்பூசி (கர்ப்பிணி) | 374 |
| 5 | இசிவு நோய் தடுப்பூசி (10 வயது) | 345 |
| 6 | இசிநோய் தடுப்பூசி (16 வயது) | 303 |
| 7 | தட்டம்மை தடுப்பூசி | 374 |

| | | |
|---|---|---|
| 8 | காசநோய் தடுப்பூசி | 354 |

ஒவ்வொரு புதன்கிழமையும் தடுப்பூசி தினமாக அனுசரிக்கப்பட்டு நகர்நல மையம் மூலமாக தடுப்பூசி வழங்கப்பட்டு இலக்கு நிறைவேற்றப்படுகிறது.

**மருத்துவ முகாம்கள்—**

போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் 2018—2019—ம் நிதியாண்டில் மார்ச் 10ஆம் தேதி அன்று நடைபெற்றது. இதில் 2218 நபர்கள் பயன்அடைந்துள்ளனர்.

**24. கட்டணக்கழிப்பிடம்..**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி கட்டணக் கழிப்பிடங்கள் செயல்பட்டு வந்தன.

1) நகராட்சி அண்ணா பேரூந்து நிலையம்

2) டவுண்ஹால் ரோடு

3) கே.சி.ரோடு (பெண்கள்)

4) முத்துசாமி பூங்கா பெண்கள் 1, ஆண்கள் 1,

5) பம்ப்ஹவுஸ் சாலை கட்டண கழிப்பிடம்

6) வல்லம் ரோடு கட்டண கழிப்பிடம் (பெண்கள்)

7) மேலூார் கே.சி.ரோடு பெண்கள் கழிப்பிடம்

8) காலாங்கரை ரயில்வே ஸ்டேஷன் ரோடு (ஆண்கள் மாணவர் விடுதி மேற்புறம்)

9) காலாங்கரை மின்வாரியம் அருகே

10) காலாங்கரை (நகராட்சி சுடுகாடு பக்கம்)

11)வல்லம் ரோடு மேற்குப்பகுதி

12) பம்புஹவுஸ் ரோடு மேற்கு பகுதி

மன்ற தீர்மான எண் 175/15,9,2015 மற்றும் தீர்மான எண் 179 நாள் 15.9.2015—ன்படி திறந்த வெளி மலம் கழிப்பதனை முற்றிலும் ஒழிக்கும் வகையில் நகராட்சி கட்டண கழிப்பிடங்களை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ள தீர்மானிக்கப்பட்டு சுய உதவிக்குழுக்கள் மூலமாக கழிப்பிடம் பராமரிக்கப்படுகிறது. (பேரூந்து நிலைய கழிப்பிடம் நீங்கலாக)

**25. சுகாதாரம் மற்றும் துப்புரவு:**

இந்நகராட்சிப் பகுதியில் 12 நவீன கழிப்பிடங்களும் அதில் மொத்தம் 110 இருக்கைகளும் உள்ளன. Òபுதிதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு தூய்மை கழிப்பிட வசதி அமையப் பெற்றதாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

நகரில் வீட்டு கழிப்பிடங்கள் 4364 எண்ணம் உள்ளது.

அறிக்கை ஆண்டின் இறுதியில் பணிபுரியும்

<u>துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை</u>

| | |
|---|---|
| 1) திடக்கழிவு சேகரிப்பவர்கள் | 7 |
| 2)கலவை உரக்கிடங்கு பணியாளர் | 1 |
| 3) வாறுகால் பணியாளர்கள் | 6 |
| 4) வாகன பணியாளர்கள் | 12 |
| | --------- |
| அனுமதிக்கப்பட்டுள்ள | 26 |
| | --------- |

மொத்த பணியிடங்கள் 57

காலியிடங்கள் – 37

**<u>26)சுகாதாரப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் விபரம்:</u>**

| | |
|---|---|
| 1) ஆட்டோக்கள் | 8 |
| 2) மினி லாரிகள் | 2 |
| 3) டம்பர் பிளேஸர் லாரி | 1 |

**<u>27) திடக்கழிவு மேலாண்மை திட்டம்</u>**

இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் வர்த்தக நிறுவனங்களிலும் சேகரமாகும் கழிவுகள் ஆட்டோக்கள் தள்ளுவண்டிகள் மூலமாக துப்புரவு பணியாளர்களால் பெறப்பட்டு லாரிகள் மூலம் கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. அறிக்கை ஆண்டில் சேகரிக்கப்பட்ட கழிவுகளின் அளவு 475.30 மெ.டன் ஆகும். அறிக்கை ஆண்டில் கழிவுகள் ஏதும் விற்பனை செய்யப்படவில்லை. 2018–19ல் ரூ.12000/–க்கு உர விற்பனை செயய்யப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை முழுமையாக செயல்படுத்திட மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் தனித்தனியாக பிரித்து கலவை உரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது 18 வார்டுகளில் வீடுகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை பிரித்து வாங்கப்பட்டு றுனைேசடிற உடிஅயீடிளவ, ஏநசஅஉைடிஅயீடிளவ தயார் செய்யப்பட்டு வரப்படுகிறது.

ஆ) வங்கி கணக்கு பரிவர்த்தனை அனைத்தும் பாரதவங்கி திருவிதாங்கூர் செங்கோட்டை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றபடியால் அவர்களின் சொந்த நிதி

மூலமாக இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு மாசற்ற வாகனம் இலவசமாக வழங்க கோரி நகராட்சி மூலமாக கோரிக்கை வைக்கப்பட்டது அதனை ஏற்றுக்கொண்டு பாரதவங்கி திருவிதாங்கூர் மூலமாக அறிக்கை ஆண்டில் ரூ.1.58 லட்சம் மதிப்பீட்டில் மாசற்ற வாகனம் கழிவு சேகரிப்பதற்காக (Pollute free vechile) வழங்கப்பட்டு அவை பொது சுகாதார பிரிவு மூலம் நகரப்பகுதிகளில் கழிவுகள் சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இ) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க. 36909–7/பி3 2015 நாள் 18.12.2015–ன்படி செங்கோட்டை நகராட்சியில் 24 வார்டுகளும் தனியார் மயம் மூலமாக மேற்கொள்ள வழங்கப்பட்ட அனுமதியின்படி நகர்மன்ற தீர்மான எண் 88 நாள் 22.10.2018–ன்படி ஏ.வி.எம் செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனம் மூலமாக 68 துப்புரவு பணியாளர்கள் தனியார் மயம் மூலமாக பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு துப்புரவு பணிகள் தனியார்மயம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது வகையில் தணிக்கையாண்டில் ஏ.வி.எம். நிறுவனம் இராசபாளையம் மூலமாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்றுவருகின்றது. பொது சுகாதர பிரிவில் 1) துப்புரவு அலுவலர் 2) துப்புரவு ஆய்வாளர் 3) சுகாதார மேற்பார்வையாளர்கள் -3 4) துப்புரவு பணியாளர்கள் 22 மற்றும் பரப்புரையாளர்கள் -11 மேற்பார்வையாளர் 1 , டி.பி.சி பணியாளர்கள் - 30, தனியார் மய துப்புரவு பணியாளர்கள் 44 இருந்து வருகின்றனர் இது வகையில் பொது சுகாதார பிரிவிற்கு அறிக்கைஆண்டில் ஆண்டு ஒன்றுக்கு செலவினம் ரூ.6994007 (கணக்கு தலைப்பு 2308009) ஆகும்.

**<u>28) உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம்:</u>**

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 நடைமுறைப்படுததப்பட்டு அரசாணை (நிலை) எண் 347 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 22.12.2011-ன்படி உணவு பாதுகாப்பு அலுவலர் பணியிடங்கள் ஒவ்வொரு நகராட்சி பகுதிக்கும் தோற்றுவிக்கப்பட்டு நகராட்சிகளில் பணிபுரிந்து வந்த உணவு ஆய்வாளர்கள் அனைவரையினையும் உணவு பாதுகாப்பு அலுவலராக (அயற்பணி) ஆணையிடப்பட்டுள்ளது. அதுவகையில் செங்கோட்டை நகராட்சி பகுதிகளிலும் உணவு பாதுகாப்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பொது சுகாதார இயக்குநர் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் பணியாற்றும் அலுவலராக செயல்படுவார்கள். எனவே உணவு கலப்பட தடைசட்டத்தின் படி வசூல் செய்யப்பட்டுவந்த (பி.எப்.ஏ) உரிமங்கள் இனி

நகராட்சி மூலமாக வசூலிக்க இயலாது. இதனால் நகராட்சி வருவாய் இழப்பு ஏற்படுகின்றது.

**29) அச்சமும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்:**

இந்த இனத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் ரூ.172705/– உரிமையாணைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. (கணக்கு தலைப்பு 1401101)

**30) விழாக்களும் சந்தைகளும்**

இந்நகராட்சியில் பிரகடனம் செய்யப்பட்ட விழாக்கள் எதுவும் இல்லை. அறிக்கை ஆண்டில் இந்நகரில் தைப்பூசத்தன்று அருள்மிகு குலசேகரநாத சுவாமி கோவில் தைப்பூச திருவிழாவும், தேரோட்டமும் வழக்கம் போல் தேவஸம் போர்டு மூலம் நடத்தப்பட்டது. நகராட்சி மூலம் குடிநீர் வசதிகள், சுகாதார ஏற்பாடுகள் மற்றும் துப்புரவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

**31) பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் செய்லபட்டு வருகிறது. ஏற்கனவே நகராட்சியில் உள்ள பழைய நீர் ஆதாரங்கள் மற்றும் தாமிரபரணி கூட்டு குடிநீர்த்திட்டம் வாயிலாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 91 லிட்டர் வீதம் சுமார் இருபது லட்சம் லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இது வகைக்கு தரைமட்ட நீர்த்தேக்க நிலையம் ஒன்றும், மேல்நிலை நீர்த்தேக்கம் இரண்டும் செயல்பட்டு வருகிறது.

தண்ணீர் விநியோகம் மூன்று மின் மோட்டார்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவைகளில் இரண்டு மோட்டார்கள் 30 குதிரை வேகத்திறன் கொண்டதாகும்.

நீர்தேக்க நிலையத்தில் உள்ள தரைமட்டத்தொட்டிலிருந்து நகரின் பெரும் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் கொள்ளவு 2,40,000 லிட்டர்கள் ஆகும். குடிநீர் வழங்கப்படும் பகிர்மான குழாய்களின் மொத்த நீளம் 21.104 கி.மீ ஆகும். நாள் ஒன்றுக்கு 24 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

அறிக்கை ஆண்டின் இறுதியில் 144 பொது குடிநீர் குழாய்கள் செயல்பட்டு வருகிறது

மொத்த வீட்டுக் குழாய் இணைப்புகள் : **4567**

அளவு கருவி பொருத்தப்பட்ட இணைப்புகள் : **3814**

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் வழங்கப்படவேண்டும் என்ற மிகுந்த அக்கறையுடன் பிளிச்சிங் பவுடர் கலந்து விநியோகம் செய்வதனை மாற்றியமைத்து குளோரினேஷன் கேஸ் பிளான்ட் ஒன்று ரூ.**8.00** லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு அதன்படி தண்ணீரில் குளோரின் மிகச்சரியான அளவில் கலந்து இப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுகின்றது. இயக்குதல் பேனுதல் மற்றும் இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் ரூ.66.00 லட்சம் மதிப்பீட்டில் மற்றும் துணை மதிப்பீடு மற்றும் பொது நிதி 18.00 லட்சம் ஒப்பந்த வீதம் 9.92 சதவீதம் ஆக மொத்தம் ரூ.90.00 லட்சம் மொத்த மதிப்பில் 4.00 லட்சம் கொள்ளவு கொண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு அதன்மூலமாக நகராட்சி பகுதியில் குடிநீர் சீராக விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலகத்திலிருந்து காணொலி மூலமாக பொதுமக்கள் பயன்பாடிற்கு கொண்டுவந்தார்கள்.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.13277/2018/ஐளு1 நாள்.03.07.2018 பிரகாரம் அனைவருக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் மூலம் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது மேற்படி திட்ட மதிப்பு வட்டியில்லா கடன் டூபிட்கோ நிறுவனம் மூலம் அனுமதி வழங்கி 7 ஆண்டுகளில் கடன் திரும்ப செலுத்தப்பட வேண்டிய கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**<u>32) அடிபம்பு விபரம்:</u>**

**1)** இந்நகராட்சியால் கடந்த ஆண்டில் மொத்தம் **133** அடிபம்புகள் பராமரிக்கப்பட்டு வந்தது. அவை தற்போதும் பராமரிப்பில் உள்ளது. அடிகுழாய் பராமரிப்பு செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 1013252/– (2305009)ஏற்படுகிறது.

**2)** ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் பிவிசி டேங் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்படும் மின்மோட்டார் குடிநீர் அல்லாத குழாய்கள் **42** எண்ணம் பராமரிப்பில் இருந்து வருகின்றது.

மொத்த அடி பம்புகள் **133** ஆகும் மேலும் அறிக்கை ஆண்டில் **11** இடங்களில் புதிதாக மின்மோட்டார் மூலம் சின்டெக்ஸ் டேங் அமைக்கப்பட்டுள்ளது

**<u>33) சந்தைகள்:</u>**

அறிக்கை ஆண்டில் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ஒரு வாரச் சந்தையை அனுபவித்துக் கொள்ளும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டது.

சந்தை மற்றும் வருவாய் தரத்தக்க இனங்களிலிருந்து கீழ்க்கண்ட விபரப்படி வருவாய் பெறப்பட்டது. அரசாணை(நிலை) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.9.2008 படி ஒவ்வொரு ஆண்டும்

நடைபெற்று வந்த குத்தகை உரிமை இனங்களை மூன்று ஆண்டுகள் உரிம அனுபவம் ஏற்றுக்கொள்ள நெறிமுறைகள் வகுத்து ஆணையிடப்பட்டுள்ளது. அது வகையில் 2016-2017 முதல் 2019.2020 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை விடப்ட்டதில் 2018-2019-ம நிதியாண்டிற்கு வரப்பெற்ற வரவுகள்

| வ.எண் | இனம் | தொகை | கணக்கு தலைப்பு எண் |
|---|---|---|---|
| 1. | வாரச்சந்தை | 295773 | 1301004 |
| 2. | பேருந்து நிலைய கட்டண வசூல் (னுநயீயசவஅநவேயட ஊடிடடநஉவடிழே) | 290897 | 1808002 |
| 3. | ஆடு அடிக்கும் சாலை (னுநயீயசவஅநவேயட ஊடிடடநஉவடிழே) | 163992 | 1401104 |
| 4. | பயன்தரும் மரங்கள் | 50500 | 1301008 |
| 5. | தெருக்களில் விற்பனை செய்பவர்களிடமிருந்து வசூல் செய்யும் உரிமம் | 239645 | 1304001 |
| 6 | சைக்கிள் நிறுத்தும் இடம் உரிம்ம் | - | - |

**34) வண்டிப்பேட்டை:**

நகராட்சிக்கு சொந்தமான வண்டிப்பேட்டை எதுவும் இல்லை.

**35) பேரூந்து நிலையம்:**

செங்கோட்டை நகராட்சி பேரூந்து நிலையம் “ சி ” பிரிவு பேரூந்து நிலையமாக அறிக்கையாண்டில் இருந்து வருகின்றது. நகராட்சி பேரூந்து நிலையத்தில் வந்து செல்லும் பேரூந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் விடப்பட்டதில் அறிக்கை ஆண்டில் ரூ. 290897/– வருவாய் கிடைத்துள்ளது. (Heகணக்கு தலைப்பு எண்.1808002)

**36) ஆடறுப்பு மனை:**

பகுதி 2 திட்டம் 2007.08ன் கீழ் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் (ரூ.10.00 நகராட்சி பங்களிப்பு ரூ.10.00 லட்சம் மான்யம் என்ற திட்டத்தின்படி) நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஆடறுப்புமனை கட்டிடம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரப்பெற்றது. குத்தகை ஒருவரும் கோராத காரணத்தினால் நிர்வாகம் மூலமாக வசூலிக்கப்பட்டது அறிக்கை ஆண்டில் ரூ. 163992/ . (Heகணக்கு தலைப்பு எண்.1401109)

**37) பூங்கா:**

இந்நகராட்சிக்கு சொந்தமான முத்துசாமி பூங்கா ஒன்று பராமரிப்பில் உள்ளது. இப்பூங்காவின் மொத்த பரப்பளவு **4.5** ஏக்கர் ஆகும். இப்பூங்காவினை பராமரிக்க நகராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் பூங்காவினை அழகுபடுத்தும் வகையில் ரூ. **19.00** லட்சம் மதிப்பீட்டில் செயல் வடிவம் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு செயற்குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு பணிகள் முடிவு பெற்று பொதுமக்கள் பயன்பாடிற்கு கொண்டுவரப்பட்டது பூங்காவின் கீழபுறம் தமிழக சுற்றுலாத்துறையின் மூலமாக சுதந்திர போராட்ட வீரர் வாஞ்சிநாதன் அவர்களுக்கு மணிமண்டபம் பொதுப்பணித்துறை மூலமாக கட்டுமானம் கட்டி முடிக்கப்பட்டு **23.12.2013** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாடுக்கு கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் தியாகிகள் தினத்தன்று வீரவாஞ்சிநாதன் அவர்களின் மணிமண்படபத்தில் உள்ள திருவுருவ சிலைக்கு மலர்வைத்து மரியாதை செலுத்தும் அரசு விழாவாக கொண்டாடிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது. அதன்படி அறிக்கையாண்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், செய்திமக்கட்தொடர்ப்பு அலுவலர் ஆகியோர்களால் மரியாதை செலுத்தப்பட்டது.

**38) தொழிற்சாலைகள்:**

இந்நகரில் தொழிற்சாலைகள் என்று சொல்லத்தக்க வகையில் எந்த ஒரு தொழிற்சாலைகளும் இல்லை அரிசி ஆலைகள் **9** எண்ணம் அறிக்கை ஆண்டிற்கு முன்னர் இருந்து வருவது தொடர்ந்து செயல்படுகிறது. புதியதாக எந்த ஒரு தொழிற்சாலைகளும் அறிக்கையாண்டில் உருவாகவில்லை.

**39) நகரமைப்பு பிரிவு:**

நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் அறிக்கை ஆண்டு முழுவதும் காலியாக உள்ளது திரு.வே.ஜின்னா நகரமைப்பு ஆய்வாளர் தென்காசி நகராட்சி அவர்கள் கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறார்.

<u>நகரமைப்புத் திட்டம்:</u> <u>செங்கோட்டை முழுமைத்திட்டம்:</u>

**<u>40) முழுமைத்திட்டம்:</u>**

செங்கோட்டை நகராட்சியில் முழுமைத் திட்டமானது உள்ளூர்த் திட்ட குழுவினால் அங்கீகாரம் பெறப்பட்டு இறுதி கட்ட முழுமைத் திட்டமானது இவ்வலுவலக ந.க.எண் **9463/87** டி**1** நாள் **4.3.88**–ல் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அரசாணை எண் **228** , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் **19.2.91** ல் செங்கோட்டை உள்ளூர் திட்டக் குழும முழுமைத் திட்ட அறிக்கை அங்கீகாரம் வழங்கப்பட்டதை மாவட்ட அரசிதழ் மற்றும் இரண்டு தினசரி நாளிதழிலும் பிரசுரம் செய்யப்பட்டுவிட்டது. தற்போது, மறுஆய்வு முழுமைத்திட்டம் அரசாணை எண் **250** நாள். **12.11.2010** நகர்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதி துறையினரால் ஒப்பதல் செய்யப்பட்டு உரிய பிரசுரம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கட்டிட அனுமதிகளும் வழங்கப்படுகிறது.

**<u>41) நகரமைப்பு விரிவு அபிவிருத்தி திட்டம்:</u>**

இந்நகராட்சியில் இரண்டு விரிவு அபிவிருத்தி திட்டங்கள் முறையே **1** மற்றும் **2**–ல் உள்ள நில உரிமையாளர்கள் கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு **25**–ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநரால் **30.3.94**–ம் தேதிய அரசிதழ் பகுதி **6** பிரிவு **1** பக்கம் **310, 311**–ல் பிரசுரம் செய்யப்பட்டது.

மேற்படி படிவம் **9**–ன் நகலினை கதிரவன் நாளிதழில் **9.7.94**–ம் தேதி வெளியிடப்பட்டது. விரிவு அபிவிருத்தி திட்டம் ஐ மற்றும் ஐஐ முழுமைத் திட்டத்தின் நில உபயோக அடிப்படையில் சிறிய மாற்றங்கள் செய்து திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு நகர் ஊரமைப்புச் சட்டம் **1971** பிரிவு **29**–ன் கீழ் ஒப்புதல் வழங்கவும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பவும், உள்ளூர் திட்டக் குழு மத்தியில் தீர்மானம் எண் **1**– மற்றும் **2** நாள் **10.11.94**–ல் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி விரிவு அபிவிருத்தி திட்டம் ஐ –ம் மற்றும் ஐஐ–ல் திட்டத் தொகுப்புகளுடனும் தீர்மான நகலுடனும் இறுதி ஒப்புதலுக்கு நகர் ஊரமைப்பு இணை இயக்குநரால் **5.12.94**–ம் தேதியில் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டது.

அதன்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் குறைபாடுகள் நிவர்த்தி செய்து 14.8.95, 18.5.96 தேதிகளில் விரிவு அபிவிருத்தி திட்டம் ஐ மற்றும் ஐஐ–ஐ இறுதி ஒப்புதலுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநரால் 20.10.95–ம் தேதி விரிவு அபிவிருத்தி திட்டம் ஐ–யும், 8.4.96–ம் தேதி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் ஐஐ–யும் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. விரிவு அபிவிருத்தி திட்டம் ஐ மற்றம் ஐஐ ஆகியவை நகர ஊரமைப்பு ஆணையர் சென்னை செயல்முறைகள் ந.க. 31956/02/டிபி 3 மற்றும் 6424/03 டிபி1 நாள் 28.3.08 மற்றும் 26.3.08ன்படி நகர ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன் கீழ் மறு ஆய்வு இணைத்தும் அறிவிக்கப்பட்டு அதன்மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)ன் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 1, நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம், ந.க.எண்.7293/2010/டிபி3, நாள். 20.05.2011ல் உறுதிசெய்யப்பட்டு அதன்படி தமிழ்நாடு அரசிதழில் ழுயணணநவவந ழூடி. 22 யீபசவ ஏஐ, ளுநஉவடைடே –1 ஞயபந ழூடி–250 நாள். 15.6.2011ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது . மேலும், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.16774/2010/டிபி3 நாள்.20.07.2011ல் உறுதி செய்யப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில் ழுயணணநவவந ழூடி. 30 யீபசவ ஏஐ, ளுநஉவடைடே –1 நாள். 10.8.2011ல் பிரசுரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது..

**<u>42) வரிவிதிப்பு நிதி நிர்வாகம்</u>**

அறிக்கை ஆண்டில் வருவாய் பிரிவில் வருவாய் ஆய்வாளராக கீழ்க்கண்டவிபரப்படி பணியாற்றி வந்தவர்கள் விபரம்

திரு செ.லெட்சுமணன், வருவாய் ஆய்வாளர் 01.04.2018 முதல் அறிக்கையாண்டு முழுவதும் மற்றும் தொடாந்தும் பணிபுரிந்து வருகிறார்..

அரசாணை (நிலை) எண் 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்22.07,2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள் 30.07.2018 உத்திரவின்படி 1.4.2018 முதல் பொது வரிதிருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதன்படி செங்கோட்டை நகராட்சி மன்றத்தின் தீர்மானம் எண் 73 நாள் 20.9.2018 ன்படி குடியிருப்பு கட்டிடத்திற்கான வரி 50 விழுக்காடு உயர்த்துவது என்றும் வணிக பயன்பாட்டிற்கான கட்டிடங்களுக்கு 100 விழுக்காடு வரி உயர்வு செய்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| <u>அ. சொத்து வரி:</u> | <u>அரை வருடத்திற்கு அரை வருட வாடகை மதிப்பு</u> |
| --- | --- |
| 1) பொது காரியங்களுக்கு | 4 சதவீதம் |

2) தண்ணீர் மற்றும் சாக்கடை 2 „

3) துப்புரவு பணி 1 1/4 „

4) விளக்கு வரி 3 „

---

10 1/4 சதவீதம்

---

**ஆ. காலியிடங்களின் மீது வரி:**

மூலதன மதிப்பின் பேரில் ஒரு அரையாண்டிற்கு **1 1/4** சதவீதம் வீதம் தொடர்ந்து வரி விதிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண் **843** நாள் **10.11.98** ன் படி மூலதன மதிப்பு ரூ **1000/–**க்கு ரூ **14/–** என்ற அடிப்படையில் காலிமனை வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்தது பின்னர் **09 10** இரண்டாம் அரையாண்டு முதல் அரசு ஆணை எண் **151** ந நி (ம) கு வ துறை நாள் **20.8.09** முதல் மண்டலாமாக நிர்ணயம் செய்யப்பட்டு சதுரஅடிக்கு வசூலிக்கப்பட்டு வருகிறது..

**இ). தொழில் வரி:**

Òபுதிய தொழில் வரி சட்டம் **59/1998–**ன்படி நடவடிக்கை தொடரப்பட்டு வரி விதிப்பு ஷை சட்ட விதிகளின் ஷெட்டியூலில் கண்டுள்ள வரி விகிதங்களில் குறைந்த அளவு தொழில் வரியானது விதிப்பது என நகர்மன்றத்திய 07.06.2018–ம் தேதிய தீர்மானம் எண் 47 தீர்மானிக்கப்பட்டது. இதன்படி புதிய தொழில் வரி விகிதங்கள் 01.04.2018 முதல் அமுல்படுத்தப்பட்டது. கேட்புத் தொகையாக ரூ.**15.70** லட்சம்/– வந்துள்ளது. இதில் **12.48**லட்சம் /– ம் நிலுவையாக ரூபாய் **3.22** /–ம் .வசூல்செயயப்பட்டுள்ளது.

## 45) நிதி நிர்வாகம்

**அ) நகராட்சியின் வரவு செலவு விபரம்:**

அறிக்கை ஆண்டில் கணக்கராக பணிபுரிந்தவர்கள் விபரம்

திரு **நா. கண்ணன்**, கணக்கராக (Class V) அறிக்கை ஆண்டு முழுவதும் மற்றும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

வரவு செலவு நிதி நிலை அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலமாக வெளியிடப்பட்ட புதிய நடைமுறைகளின்படி ஊறுகூஷளு -ல் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி நிலை அறிக்கையினை மன்றம் தனது தீர்மான எண் 02 நாள் **28.3.2018–**ன்படி அங்கீகாரம் வழங்கியுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அரசிதழ் வெளியீடு நாள் 2.6.2017-ன்படி நகராட்சி கணக்கு பரிவர்த்தனைகள் அனைத்தும் இணையதள வழி ஊறுகூஷளு (ஊநவேசயடணைநன றநடி டீயளநன யுஉஉழரவெiபெ ளுலளவநஅ) நடைமுறைப்படுத்தப்பட்டதன்படி இந்நகராட்சி 01.6.2017 முதல் அனைத்து வரவு செலவு விபரங்களும் இணையதள வழி அனைத்து அலுவலர்களுக்கும் உள்நுழையீடு குறியீடு எண் பெறப்பட்டு அதன்படி செயல்படுத்தப்படும் நடைமுறையும், இயல்பு முறை கணக்கு நடைமுறையின்படி தற்போது 7 இலக்கங்களை கொண்டு கணக்கு தலைப்பின் கீழ் வரவு செலவு நடைமுறை உருவாக்கப்பட்டு அதன்படி செயல்ப்படுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சியின் கணக்கு அறிக்கை

ஆண்டிற்கானது 01.4.2018 முதல் 31.03.2019 வரை முடிக்கப்பட்டு 01.04.2019 அன்று உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்ட்டது.

## அ) வருவாய் மற்றும் மூலதன நிதி

### 1) வரவினங்கள்

இந்நகராட்சியின் 2018–2019 ம் ஆண்டுக்கான திருத்தம் செய்த மதிப்பீட்டிலும் 2019–2020ம் ஆண்டிற்கான வரவு செலவு உத்தேச மதிப்பீட்டிலும் சில முக்கிய இனங்களின் வரவின தொகுப்பு பின் வருமாறு

| வ.எண் | தலைப்பு | இனவிபரம் | திருத்திய மதிப்பீடு 2018–2019ன்படி (ரூ.லட்சத்தில்) | உத்தேச மதிப்பீடு 2019–2020 (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | **வரவு (வருவாய் இனம்)** | | |
| | **450** | **முன் இருப்பு** | 48.59 | 46.22 |
| 1 | 110 | வரி இன வருவாய் | 89.80 | 89.15 |
| 2 | 120 | பகிர்மான நிதிகள் | 22.99 | 359.50 |
| 3 | 130 | வரிஇல்லா இனம் | 15.63 | 16.22 |
| 4 | 140 | கட்டணம் | 19.02 | 22.12 |
| 5 | 150 | விற்பனை வரவு | 14.56 | 11.00 |
| 6 | 160 | வருவாய் மான்யம் | 1226.23 | 125.10 |
| 7 | 170 | முதலீடுகளின் மீது வரவு | 6.80 | 5.11 |
| 8 | 171 | வட்டி | 10.06 | 17.22 |
| 9 | 180 | இதர வரவு | 8.00 | 6.72 |
| 10 | 311 | குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு | 235.65 | 110.00 |
| 11 | 320 | மான்யம் பங்களிப்பு | | |
| | | **மொத்தம்** | 1648.74 | 808.36 |
| | | **வரவு (மூலதனம்)** | | |
| 12 | 320 | மான்யம் பங்களிப்பு | 71.45 | 62,11 |
| 13 | 330 | கடன்கள் | 0 | 168.25 |
| | | **மொத்தம்** | 71.45 | 230.36 |
| | | **மிகு மொத்தம் வரவு** | 1720.19 | 1038.72 |

### 2) செலவினங்கள்

| **வ.எண்** | தலைப்பு | **இனவிபரம்** | திருத்திய மதிப்பீடு 2018–2019ன்படி (ரூ.லட்சத்தில்) | உத்தேச மதிப்பீடு 2019–2020 (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | **செலவு (வருவாய்)** | | |
| 1 | 210 | ஊதிய செலவு | 249.51 | 262.75 |
| | 220 | நிர்வாக செலவு | 58.57 | 62.11 |
| | 230 | வட்டி மற்றும் நிதி செலவுகள் | 255.00 | 267.11 |
| | 240 | பராமரிப்பு மற்றும் செயலமுறை | 0.05 | 0.11 |
| | 250 | அமைப்பு செலவு | 20.00 | 21.22 |
| | 260 | மான்யம் பங்கு தொகை | 0 | 11.22 |
| | 290 | நிதி மாற்றங்கள் | 0 | 0 |
| | 350 | இதர பொறுப்புக்கள் | 43.98 | 47.11 |

| | | | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | **627.11** | **671.63** |
| | செலவு (மூலதனம்) | | |
| 260 | மான்யம் பங்கு தொகை | 0.00 | 2.11 |
| 330 | கடன் திரும்ப செலுத்தல் | 0.00 | 0.00 |
| 410 | நிலையான இருப்புகள் | 646.50 | 712.17 |
| | **மொத்தம்** | 646.50 | 714.28 |
| | **மிகுமொத்த செலவு** | 1273.61 | 1385.91 |
| | **உபரி/பற்றாக்குறை** | **172.72** | **347.19** |
| **450** | **இறுதி இருப்பு** | **48.59** | **393.41** |

**(3) மாநில நிதிஆணைய மான்யம்**

(1) மாநில நிதி ஆணையம்..

அறிக்கையாண்டில் மாநில நிதி ஆணைய வரவு ரூ.455.53 வரப்பெற்றதில் ஓய்வூதிய பங்கு ரூ.96.03/- மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டு குடிநீர் திட்ட பராமரிப்பு கட்டணம் ரூ.0.00 லட்சம் பிடித்தம் போக நிகரம் ரூ.359.50 லட்சம் மட்டும் பகிர்மான நிதி வரவு வரப்பெற்றது.

(2) 14வது நிதி குழு மான்யம்

அறிக்கையாண்டில் 14வது மத்திய நிதி குழு மான்யம் ரூ.52.51 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. செயல்திறன்மான்யம் பெற்றிட உரிய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

**43) கடன்:**

வருட ஆரம்பத்தில் அரசிற்கு செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை ரூ. 52.17 லட்சம் கடன்களில் சாலை பணிகள், குடிநீர் விநியோகம், வறட்சி நிவாரண பணி போன்ற இனங்களுக்காகவும், கடைகள் பேரூந்து நிலையம் கட்ட ஐ.யு.டி.பி மூலம் கடனும் நடப்பு அறிக்கை ஆண்டில் அசலும் வட்டியாக பின்வருமாறு உள்ளது

| | |
|---|---|
| மொத்த கடன் அசல் | **ரூ. 52.17 லட்சம்** |
| கடன் அசல் செலுத்தியது | **ரூ. 4,95** |
| மொத்த அசல் | **ரூ. 4.95** |
| மொத்த வட்டி மட்டும் | **ரூ. 0,86** |
| மொத்த அசல் வட்டி கடன் | **ரூ. 98.65** |

ஒருங்கிணைந்த தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக காப்பீடு கழக கடன் தொகை ரூ.**234.95** செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ஆண்டு இறுதியில் அரசுக்கு திரும்பச் செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டி ரூ. **333.60** லட்சம் ஆகும்.

**44) தணிக்கை அறிக்கை:**

அறிக்கை ஆண்டில் யார் மீதும் தணிக்கையில் சர்சார்ஜ் நிர்ணயம் செய்து அறிவிக்கப்படவில்லை. **2017 – 2018**–ம் ஆண்டு முடிய தணிக்கை அறிக்கை குறிப்புகள் வரப் பெற்றுள்ளது. **1993–94** ம் ஆண்டு முதல் தணிக்கை தடைகள் நிலுவையில் உள்ளது. ஆண்டின் முடிவில் தணிக்கைத் தடைகளின் நிலுவை மொத்த எண்ணிக்கை 602 ஆகும்.

தற்போது 1993-1994 முதல் 2017-2018 வரை 602 தணிக்கை தடைகள் நிலுவை உள்ளது.. இதில் சிறப்பு பத்திகள் 223 எண்ணம் மற்றும் சாதாரண பத்திகள் 379 எண்ணம் நிலுவையாக உள்ளது. அறிக்கையாண்டில் உயர்மட்டக்குழு நடைபெறவில்லை ஒரு தணிக்கை கூட்டமர்வு நடத்தப்பெற்று இதில் **48** பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டின் ஊறுகூஷளு ஆண்டு கணக்கு உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு **01.04.2019** அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2017–2018**ஆம் ஆண்டு முதன்மை தணிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநில முதன்மை கணக்காயர் அவர்களது தணிக்கை குறிப்பு **12** பத்திகள் வரப்பெற்றதில் உரிய பதில் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது **7** பத்திகள் மட்டும் நிலுவையாக உள்ளது.

**45) கணினி பிரிவு**

அறிக்கை ஆண்டில் கணினி உதவி திட்ட அமைப்பாளராக பணியாற்றியவர் விபரம்

**திரு வே.பாலசுப்பிரமணியன் கணினி உதவி திட்ட அமைப்பாளர்** அவர்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. 34567/2017/உவதி/நாள் 26.9.2017-ன் கடித்த்தின்படி திருநெல்வேலி மாநகராட்சியில் அயற்பணியின் கீழ் 27.06.2017 முதல் 26.9.2017 வரை பணிபுரிய ஆணையிடப்பட்டதன்பின்னர் மீண்டும் 30.4.2018 வரையிலான காலத்திற்கு அயற்பணியின் கீழ் பணியாற்ற தெரிவிக்கப்பட்டதன்படி திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலத்தில் அயற்பணியின் கீழ் பணிபுரிந்தும்

தனியருக்கு இந்நகராட்சியில் ஊதியம் ஏற்பளிக்கவேண்டும் என உத்திரவிடப்பட்டதனை தொடர்ந்து ஊதியம் இந்நகராட்சியில் ஏற்பளித்தும் அனுமதிக்கப்பட்டது. மேலும் இந்நகராட்சி கணினி சேவைகள் அனைத்தும் பாதிக்காத அளவிற்கு மாற்று ஏற்படாக கடையநல்லூர் நகராட்சியின் கணினி உதவி திட்டஅமைப்பாளர் திரு எம்.செல்வகுமார் அவர்களை வாரம் இருமுறை செங்கோட்டை நகராட்சி பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.பின்னர் மீண்டும் திரு.வே.பாலசுப்பிரமணியன் கணினி உதவி திட்ட அமைப்பாளர் செங்கோட்டை நகராட்சியில் கணினி உதவி திட்ட அமைப்பாளராக தெடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

1) இந்நகராட்சியில் 13 கணினிகள் 4+++2+பிரிண்டர்கள் செயல்பாட்டில் உள்ளது. இவற்றில் அனைத்து வரி இனங்கள், வரியில்லா இனங்கள், கட்டிட விண்ணப்பங்கள், பிறப்பு இறப்பு ஆவணங்கள், போன்றவை கணினி மயமாக்கப்பட்டு பொதுமக்களுக்கு உடனுக்குடன் சான்றுகள் மற்றும் ரசீதுகள் கணினி மூலமே வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இயல்புநிலை கணக்கு (குஹளு) பதிலாக கணக்குகள் அனைத்தும் ஊறுகூஷளு மூலமே பராமரிக்கப்பட்டது.

2) தலைமை அலுவலகங்களிலிருந்து அவ்வப்பொழுது மின்னஞ்சல் மூலம் பெறப்படும் விபரங்களை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து பதில் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. அதுவகையில் அறிக்கை ஆண்டில் 1627 மின்னஞ்சல் வரப்பட்டுள்ளது.

3) மேலும் தமிழ்நாடு நகராட்சிகள் அனைத்தும் ஊறுகூஷளு (Centralized Web Based System) மையப்படுத்தப்பட்ட இணைய தள சேவை மூலமாக ஒரே சர்வர் மூலமாக வரிவசூல் மற்றும் அனைத்துவிதமான சேவைகள் துவங்கிட பயிற்சிகள் அளிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் ஊறுகூஷளு இந்நகராட்சிக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 46) தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளபடியால் இந்நகராட்சியில் பொது தகவல் வழங்கும் அதிகாரியாக மேலாளர் (வகுப்பு 4) பணியாற்றி வந்தார்கள் அதன் வகையில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் 52 விண்ணப்பங்கள் வரப்பெற்றன அவற்றிற்கு உரிய காலக்கெடுவிற்குள் பதில் அனுப்பப்பட்டு விட்டன. தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மேல் முறையீடு அதிகாரி ஆணையாளர் அவர்கள் ஆவார். இதுவகையில் அறிக்கை ஆண்டில் மேல்முறையீடு மனு ஏதும் வரப்பெறவில்லை. தகவல் பெறும் உரிமை சட்ட மனுக்கள் மீது உரிய காலத்தில் நடவடிகககை எடுக்காமல் மாநில தகவல் ஆணையத்தால் எச்சரிக்கை மற்றும் அபராதம் ஏதும் அறிக்கையாண்டில் விதிக்கப்படவில்லை.

**47) பொன்விழா ஆண்டு பணிகள்**

திருமதி செய்யதலி பாத்திமா அவர்கள் அறிக்கையாண்டு முழுவதும் சமுதாய அமைப்பாளராக பணியாற்றிவந்துள்ளார். **1.6.2016** முதல் சமுதாய அமைப்பாளர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அயற்பணியில் பணியேற்கவும், இவர்களுக்கு ஊதியம் மற்றும் பணப்பயன்கள் அத்துறை மூலமாக ஏற்பளிக்கப்படவும் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி **31.5.2016**முதல் சமுதாய அமைப்பாளர் இந்நகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் சமுதாய நல அமைப்பாளர்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி நகராட்சி பணிகளில் ஈடுபடுத்திக்கொள்ளவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறிக்கை ஆண்டில் திட்டத்திற்கான மான்ய தொகை ஏதும் வரப்பெறவில்லை.

**48. வழக்குகள்..**

அறிக்கையாண்டில் நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை ஏற்று நடத்திடவும் மன்ற ,எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கும் , வழக்கறிஞர்கள் நியமனம் செய்து கொள்வதற்கு தமிழ்நாடு நகராட்சி நடைமுறை நூல் இயல் -55 பத்தி 1ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது அதன்படி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்படும் வழக்குகள் திரு.இராமச்சந்திரன் அவர்களும், நகராட்சிகுட்பட்ட கீழமை நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகளை திரு எஸ் கிருஉஷ்ணமூாத்தி அவர்களும் மற்றும் சென்னையில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள பசுமை பேராயத்தில் நகராட்சிக்கு எதிராக தேசிய பசுமை பேராயத்தில் வழக்கு தொடுக்கப்பட்டால் மேற்படி வழக்கினை இந்நகராட்சி சார்பில் ஏற்று நடத்துவதற்கு திரு அப்துல் சலீம் அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்கள் மூலமாக அறிக்கை ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இந்நகராட்சிக்கு எதிராக கீழ்க்கண்ட வழக்குகள் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு அறிக்கையாண்டில் நிலுவையாக உள்ளது.

| வ.எண் | வழக்கு எண் | வழக்கின் தன்மை | வழக்கு தொடுத்தவர் பெயர் | முடிவு பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1 | டபிள்யு பி எம்.டி 945/2011 | ஓய்வு காலம் தவறாக கருதி அனுமதிக்கப்பட்டது | திரு அருணாசலம் ஓய்வு பெற்ற பூங்கா காவலர், இலஞ்சி | வழக்கு நிலுவை |
| 2 | டபிள்யு பி. எம்.டி.. 1254/12 | நகர்மன்ற கூட்டமண்டபத்தில் இருந்த முன்னாள் | திரு கு.சக்திவேல், தி.மு.க பிரமுகர் | வழக்கு நிலுவை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல்வர் படம் அப்புறப்படுத்தியது தொடர்பாக | | |
| 3 | றுஞ(ஆனு) சூ.10426 டிக 2017 | துப்புரவு பணியாளர் ஓய்வூதியம் | எஸ்.இசக்கியம்மாள் துப்புரவு பணியாளர் | வழக்கு நிலுவை |
| 4 | றுஞ(ஆனு) சூடி.22600 டிக 2017 | பிட்டர் சுய ஓய்வு வெயிட்டேஜ் வழங்க கோருவது | கே.ஏ.முகைதீன் அப்துல் காதர் | வழக்கு நிலுவை |
| 5 | றுஞ(ஆனு) சூடி.10427டிக 2017 | துப்புரவு பணியாளர் ஓய்வூதியம் | எம்.மாடத்தி க/பெ மாரியப்பன் துப்புரவு பணியாளர் | வழக்கு நிலுவை |

**49) அம்மா உணவகம்**

தமிழகத்தில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மலிவு விலையில் அம்மா உணவகங்கள் அந்ததந்த நகராட்சிகளில் தலா ஒன்று வீதம் ஏற்படுத்தவும் நிர்வகிக்கவும் அரசாணை (நிலை) எண் 79 நாள் 31.3.2013–ன்படி ஆணையிடப்பட்டதனை தொடர்ந்து ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மலிவு விலையில் உணவுகள் வழங்கிட அம்மா உணவகம் கட்ட நகர்மன்ற தீர்மான எண் 124 மற்றும் 125 நாள் 30.6.2015–ன்படி மன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மே 2015 முதல் அம்மா உணவகம் பொதுமக்கள் பயன்பாடுக்கு கொண்டுவரப்பட்டது.

அது வகையில் அம்மா உணவக வரவு செலவு ஒரு கண்ணோட்டம்

2018–2019ம் ஆண்டு அம்மா உணவக வரவு ரூ. 6.50 **(கணக்கு தலைப்பு 1501003)**

2018–2019 ஆம் ஆண்டு உணவக செலவு

(பணியாளர் ஊதியம் , மலிகை, ) ரூ. 22.05 (**கணக்கு தலைப்பு** 2308019)

அம்மா உணவக வரவு இட்லி, மதியம் சாம்பார் சாதம், தயிர் சாதம் விற்பனை மூலமாக வரப்பெறும் வரவினை விட செலவு கூடுதலை இந்நகராட்சியின் பொது நிதி மூலமாக ஈடு செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 125 நாள் 30.06.2015–ன்படி இசைவளித்துள்ளது.

**50 அம்மா சேவை மையம்**

அம்மா மக்கள் சேவை மையம் துவங்கிட ஆணையிடப்பட்டதனை தொடர்ந்து ஒவ்வொரு பிரதி புதன்கிழமைகளும் அம்மா மக்கள் சேவை மையம் மூலமாக மனுக்கள் பெறப்பட்டு அவற்றின் மீது உடனுக்குடன் தீர்வு காணப்படுகின்றது. அது வகையில்

அறிக்கையாண்டில் **4** விண்ணப்பங்கள் வரப்பெற்று **4** விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

**51. பொது:**

(அ) இந்நகராட்சிக்கு வருவாய் இனத்தில் போதிய வருமானம் இன்மையால் அடிப்படை வசதிகளை மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியமான பணிகளை முழு அளவில் மேற்கொள்ள இயலாமல் இருக்கின்றது. **2018.19**ம் நிதியாண்டில் பொது வரிதிருத்தம் மேற்கொள்ளப்பட்டாலும் அதனால் மொத்த வருவாய் **12.17** விழுக்காடு மட்டுமே வருவாய் அதிகரித்துள்ளது.

(ஆ) ஒவ்வொரு மாதமும் மாநில நிதி மான்யம் கிடைக்கப்பெறும் வரவினை வைத்தே ஊதியம் மற்றும் நிர்வாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நகராட்சியின் வரவினை காட்டிலும் .ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 67.33 சதவீதம் அதிகமாக உள்ளது, பணியாளர் ஊதியத்தினை காட்டிலும் ஓய்வூதிய பங்களிப்பு அதிகமாக உள்ளது ஒரு காரணமாக உள்ளது.

( இ) மேலும் எதிர்வரும் காலங்களிலும், இந்நகராட்சியினை தன்னிறைவு பெற்ற நகராட்சியாக தரம் உயர்த்திட அருகில் உள்ள ஊராட்சி பகுதிகளை இணைத்தால் மட்டுமே சாத்தியமாகும். மேலும் தொடர்ந்து வளர்ச்சிப்பணிகளுக்கு அதிக அளவில் நிதிகளை பெற்றுத்தரும்படி அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அத்துடன் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஆகியோர்களை கேட்டுக்கொள்வது என முடி வு செய்யப்பட்டது.

**(உ) பொது சுகாதார பணியாளர்களின் நலனை மையமாக கொண்டு அவர்கள் தங்குவற்கு நவீன வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் 24 எண்ணங்கள் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் இயக்குதலும் பேணுதலும் இடைவெளி நிரப்பல் திட்டம் 2013–2014–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது பரிந்துரையின் பேரில் முழுமான்யம் பெறப்பட்டு கட்டுமானப்பணிகள் நிறைவு பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 8.3.2017 அன்று திறந்துவைக்கப்பட்டு பயன்பாடிற்கு வரப்பெற்றது. 22 துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளது.**

(ஊ) நகராட்சியின் அடிப்படை தேவைகள் இதன்மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவு திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் நிகர பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது. எனவே இந்நகராட்சியுடன் அருகில உள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளை இணைத்து நகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கினால் மட்டுமே பற்றாக்குறையினை சீர்படுத்த இயலும்.

அதோடு அரசின் மான்யம் கோரி அவ்வப்போது பிரேரணைகள் அரசுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும், அனுப்பப்பட்ட நிலையில் திட்டப்பணிகளை முழுமான்யத்தில் செயல்படுத்திட மான்யம் பெற்றுத்தந்து பேருதவி புரிந்த பாராளுமன்ற உறுப்பினர் , சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி , அவர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி , அனைவருக்கும் இந்நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கனிவான நன்றியினை தெரிவிக்கப்படுகிறது.

நகராட்சி அலுவலகம்

செங்கோட்டை **627 809**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
செங்கோட்டை நகராட்சி